

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

நிதி, திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

தேசிய

வரவு செலவுத்திட்டம்

2027


மக்கள் வரவுசெலவுத்திட்டம்

வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் இலகுபடுத்தப்பட்ட பதிப்பு

நவம்பர் 2026

மக்கள் வரவுசெலவுத்திட்டம்

2027 என்றால் என்ன?





வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பது அரசியலமைப்பின் தேவைப்பாடு ஒன்றாகும் (அரசியலமைப்பின் உறுப்புரை 148 -152). 2027 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடானது 2027 ஆம் ஆண்டில் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கு மான செலவின வரையறைகளையும் அச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான முன்மொழியப்பட்ட வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது. இந்த மதிப்பீடுகள் பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாதளவு சிக்கலான கணக்கீட்டு வடிவத்தில் வழங்கப்படுகிறது.

எனவே, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களமானது, அரசாங்க வரவு செலவுத் திட்டம் பற்றிய தகவல்களை எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் தொழில்நுட்ப விடயங்களைக் குறைத்து வழங்குவதற்கு உத்தேசித்துள்ளது. மேலும், வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய விடயங்களைத் தொகுத்து, வெளிப்படையாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் பொது மக்களுக்கு ஏற்ற பதிப் பொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்று பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு குறிப்பிடுகின்றது. இதன் மூலம், அனைத்து பிரசைகளும் வரி செலுத்துவோரும் வரி வருமானம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதையும், இந்த வளங்களை உகந்த முறையில் ஒதுக்குவதில் அரசாங்கத்தின் முன்னுரிமைகளையும் நன்கு புரிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முன்னெடுப்பானது வள ஒதுக்கீடு மற்றும் அதன் திறமையான பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் செலவினத் தலைப்புகள் என வகைப்படுத்தப்பட்ட மதிப்பீடுகளை முன்வைப்பதற்குப் பதிலாக, இந்த வெளியீடு துறை வாரியாக முக்கிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அரசாங்க செலவினம் பற்றிய எளிமையான தகவல்களை வழங்குகிறது. மேலும், படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் எதிர்பாரா சேவைகளுக்கான ஏற்பாடுகள் இத் துறைகளின் கீழ் கவனத்திற்கொள்ளப்படவில்லை. எளிதான உசாவுகைக்காக, துறைசார் மொத்தங்களின் ரூபா விவரங்கள் அண்மைய பில்லியனாக அண்ணளவாக மாற்றப்பட்டுள்ளன. எனவே, கணக்கீட்டு வடிவத்திலுள்ள புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் சிறிய வேறுபாடுகள் இருக்கலாம்.

வரவு செலவுத்திட்ட உரைக்குப் பின்னர் இந்த ஆவணம் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளையும் சேர்த்து இற்றைப்படுத்தப்படும் பார்வைக் குறைபாடுள்ளவர்கள் கூட எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் இந்த ஆவணம் யுனிகோட் எழுத்துருவிலும் வெளியிடப்பட்டுள்ளது.

2027 ஆம் ஆண்டில் அரசாங்கம் எவ்வாறு பணத்தைப் பெற்று செலவு செய்கின்றது







ஆம் ஆண்டுக்காக 2027

2027 ஆம் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்படும் பொருளாதார இலக்குகள்

01 2027 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 4% - 5% அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

02 2027-ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டளவில், சராசரி பணவீக்கம் 5% என்ற இலக்கை எட்டி நிலைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

03 2027 ஆம் ஆண்டில் வேலையின்மை விகிதம் 5.0% க்கும் குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

04 நிதிப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 4.5% ஆகக் கட்டுப்படுத்தப்படும்.

05 அரசாங்க வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 15.8 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செலவினத் தலைப்புகளின்படி வரவு செலவுத் திட்ட ஏற்பாடு

இவ் வரவுசெலவுத் திட்டம் 25 அமைச்சரவை அமைச்சுக்கள், 100 திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள், 9 மாகாண சபைகள், 25 மாவட்டச் செயலகங்கள் மற்றும் 21 சிறப்புச் செலவின அலகுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான இலங்கை

அனைத்து மக்களுக்குமான சிறந்த சுகாதாரம்

மூலதன செலவினம்
ரூ. 130.8 பில்லியன்

மீண்டெலும் செலவினம்
ரூ. 578.8 பில்லியன்

ரூ. 710 பில்லியன்

ரூ.	104.9 பி.	வைத்தியசாலைகள் அபிவிருத்தி
ரூ.	353.9 பி.	வைத்தியசாலைகள் தொழிற்பாடு
ரூ.	4.9 பி.	சுதேச மருத்துவம்
ரூ.	190.9 பி.	மருத்துவ வழங்கல்கள்
ரூ.	11.2 பி.	திரிபோஷ உள்ளிட்ட ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டம்
ரூ.	7.6 பி.	நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்
ரூ.	1.4 பி.	சுகாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
ரூ.	28.0 பி.	சுகாதார ஊழியர்களின் திறன் விருத்தி
ரூ.	6.5 பி.	சுவசெரிய அம்பியுலன்ஸ் சேவை



2027 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகள்

ரூ. 104.9 பில்லியன்

வைத்தியசாலைகள் அபிவிருத்தி

- வைத்தியசாலைகளை வலுப்படுத்துதல்
- முதன்மை சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்துதல்
- அவசர மற்றும் விஷேட பராமரிப்பை வலுப்படுத்துதல்

சிறந்த சுகாதார சேவைகளுக்காக மருத்துவமனைகளை வலுப்படுத்துங்கள்



பிரதான செயற்பாடுகள்

ரூ.	6.1 பி.	வைத்தியசாலை உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை மேம்படுத்துதல் - கண்டி, கராப்பிட்டிய , அம்பாறை, யாழ்ப்பாணம், மொனராகலை, எம்பிபிட்டிய, கலவான, குருநாகல், மஹரகம , கராப்பிட்டிய, மன்னார், மட்டக்களப்பு
ரூ.	8.75 பி.	மருத்துவ வசதிகள் மற்றும் உபகரணங்களை மேம்படுத்துதல்
ரூ.	18.8 பி.	நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளுக்கு உயிரியல் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை விநியோகித்தல்
ரூ.	13.79 பி.	வருடாந்தம் நாடு முழுவதும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு
ரூ.	9.4 பி.	இதய அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை, CT ஸ்கேனர்கள், டயலைசிஸ் இயந்திரங்கள் , எக்ஸ்ரே இயந்திரங்கள் போன்ற உயர்தர மருத்துவ உபகரணங்களை வழங்குதல், சுவசெரிய சேவைக்கு 45 ஆம்புலன்ஸ்களை வழங்குதல்.
ரூ.	4.5 பி.	குருநாகல், அனுராதபுரம், பதுளை, கண்டி, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளிலும், கொழும்பு, பேராதனை மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ ஆய்வகத் தொழில்நுட்பவியலாளர் (MLT) பயிற்சிப் பள்ளிகளிலும் வசதிகளை மேம்படுத்துதல்
ரூ.	6.74 பி.	ஊழியர் தங்குமிட விடுதிகள் மற்றும் மருந்துக் களஞ்சியங்களின் புனரமைப்பு, டிஜிட்டல் நோயாளி தகவல் முறைமை மற்றும் சுகாதார மனிதவளத் தரவுத்தளத்தின் மேம்பாடு மற்றும் 5 ஆண்டு கால அடிப்படை வைத்தியசாலை அபிவிருத்தி திட்டம்.

ஆரோக்கியமான சமூகங்களுக்காக ஆரம்ப சுகாதார நலத்தை மேம்படுத்துதல்



பிரதான செயற்பாடுகள்

பிரதேச மற்றும் ஆதார வைத்தியசாலைகளைத் தரம் உயர்த்துதல், மருந்துக் கஞ்சியங்களைப் புதுப்பித்தல், அத்தியாவசிய மருந்துகளை வழங்குதல், இரசாயனக் கழிவுகளைக் கொண்டு செல்வதற்கான லொரிகள் மருத்துவச்சிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கான இரட்டை கேப்கள், ஸ்கூட்டர்கள் போன்ற வாகனங்கள், மருந்துப் பொருட்களைச் சேமிப்பதற்கான குளிர்சாதனப் பெட்டிகள் ஆகியவற்றை கொள் செய்தல்.	ரூ.	16.8 பி.
ஆரோக்கியா 1,000 ஆரம்ப சுகாதார நல நிலையங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்	ரூ.	4.6 பி.

அவசர மற்றும் விஷேட சிகிச்சையை வலுப்படுத்துதல் – முக்கியமான மற்றும் விஷேட சிகிச்சைகளுக்கான விரைவான அணுகல்



பிரதான செயற்பாடுகள்

ரூ.	1.7 பி.	கொழும்பு, கண்டி, அனுராதபுர வைத்தியசாலைகளில் மகப்பேறு மற்றும் குழந்தை பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துதல்
ரூ.	2.6 பி.	தெல்லிப்பளை மற்றும் கண்டி வைத்தியசாலைகளில் புற்றுநோய் சிகிச்சை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் புற்றுநோயாளிகளுக்கு உயர்தர கதிரியக்க சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளை வழங்குதல்.
ரூ.	2.2 பி.	தேசிய வைத்தியசாலை, சீமாட்டி ரிட்ஜ்வே, முல்லேரியா மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் இதய சிகிச்சை வசதிகளை மேம்படுத்துதல்

ரூ. 190.9 பில்லியன்

மருந்துகளுக்கான அணுகலை மேம்படுத்துதல் – நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளையும் சிகிச்சையையும் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்காக



பிரதான செயற்பாடுகள்

- அத்தியாவசிய மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்தல்
- மருத்துவ வழங்கல் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்

ரூ. 7.6 பில்லியன்



நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் – ஆரோக்கியமான மக்களுக்காக

பிரதான செயற்பாடுகள்

நோய் தடுப்பு நடவடிக்கைகள்	ரூ.	6.1 பி.
தொற்றும் மற்றும் தொற்றா நோய்களுக்கான தடுப்பு நடவடிக்கைகள்	ரூ.	0.19 பி.
எய்ட்ஸ் மற்றும் காசநோய்க்கான தடுப்பு நடவடிக்கைகள், தொற்றா நோய்களின் தடுப்பு மற்றும் முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல்.	ரூ.	0.26 பி.
பெருந்தொற்றுக்கான தயார்நிலை மற்றும் பதிலளிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்	ரூ.	1.33 பி.

ரூ. 4.9 பில்லியன்

தேச மருத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் – நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளையும் சிகிச்சையையும் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்வதற்காக



பிரதான செயற்பாடுகள்

ரூ. 3.0 பி.	நாடு முழுவதும் சுதேச சுகாதார சேவைகளை வழங்குவது தொடர்பான சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள்	
ரூ. 0.5 பி.	பாரம்பரிய மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி	

ரூ. 11.2 பில்லியன்



தாய்மார்களையும் குழந்தைகளையும் பாதுகாத்தல் – ஆரோக்கியமான அடுத்த தலைமுறைக்காக

பிரதான செயற்பாடுகள்

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து உணவுப் பொதி	ரூ.	7.2 பி.
திரிபோஷா நிகழ்ச்சித் திட்டம்	ரூ.	4.0 பி.

ரூ. 28.0 பில்லியன்

சிறந்த நோயாளர் பராமரிப்பிற்காக, வலுவான சுகாதாரப் பணியாளர்களை உருவாக்குதல்

பிரதான செயற்பாடுகள்

ரூ. 0.95 பி.	அமைச்சு, அனுராதபுர போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் கல்விக் கட்டிடங்கள் நிர்மாணித்தல், அனுராதபுரம் மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் தாதியர் பயிற்சிப் பாடசாலைகள் நிர்மாணித்தல்	
ரூ. 1.65 பி.	மருத்துவர்களுக்கான விஷேட பட்டங்களைப் பெறுவதற்கான வசதிகள்	
ரூ. 23.9 பி.	சுகாதாரத் துறை பயிற்சி ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊதியம்	

ஒரு சிறந்த கல்வி முறையை உருவாக்குதல்

ஒவ்வொரு குழந்தைக்கும் சிறந்த கற்றல் வாய்ப்புகள்

ரூ. 749 பில்லியன்

மூலதன செலவினம்
ரூ. 104 பில்லியன்

மீண்டெலும் செலவினம்
ரூ. 645.4 பில்லியன்

பாடசாலைக் கல்வி	ரூ. 562.7 பி.
பல்கலைக்கழகக் கல்வி	ரூ. 148.4 பி.
தொழிற்கல்வி	ரூ. 25.7 பி.
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்	ரூ. 5.4 பி.
தம்ம பாடசாலைக் கல்வி	ரூ. 1.3 பி.
முன்-பள்ளிக் கல்வி	ரூ. 5.6 பி.



2027 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகள்

ரூ. 562.7 பில்லியன்

பாடசாலைக் கல்வி

பாடசாலையையும் கற்றலையும் மேம்படுத்துதல்

ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியைக் கிடைக்கச் செய்தல்

பாடசாலைகளையும் கற்றலையும் மேம்படுத்துதல் – சிறந்த கற்றல் சூழல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட கல்விச் சேவைகள்



பிரதான செயற்பாடுகள்		
369 தேசியப் பாடசாலைகள் மற்றும் 9,656 மாகாணப் பாடசாலைகள் மூலம் கல்வியை வழங்குவதற்கான ஆள்சார் வேதனங்கள்	ரூ.	408.0 பி.
பாடசாலைகள் பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு	ரூ.	20.0 பி.
அரச பரீட்சைகள்	ரூ.	9.60 பி.
4,250 அரச பாடசாலைகளில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், 2,000 பாடசாலைகளுக்கு மையப்படுத்தப்பட்ட இணைய ஹோஸ்டிங் (web hosting) வசதியை வழங்குதல் மற்றும் 1,000 கிராமப்புறப் பாடசாலைகளுக்கு செயற்கைக்கோள் மூலமான இணைய இணைப்பை ஏற்படுத்துதல்	ரூ.	4.0 பி.
பிரிவெனாக்கல்வி	ரூ.	10.2 பி.
கணிதம் மற்றும் ஆங்கிலக் கற்றலை மேம்படுத்துதல், தொழில்வாண்மைத் திறன் ஆசிரியர்களை உருவாக்குதல் மற்றும் பாடசாலைகளை மேம்படுத்துதல்	ரூ.	4.5 பி.
பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்	ரூ.	3.0 பி.
விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் தங்கும் விடுதிகள்	ரூ.	0.98 பி.
தோட்டப் பாடசாலைகளுக்கான வசதிகள்	ரூ.	0.70 பி.

ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியைக் கிடைக்கச் செய்தல் - குடும்பங்களுக்கான கல்விச் செலவைக் குறைத்தல் மற்றும் குழந்தைகள் பாடசாலையில் தொடர்ந்து கற்க உதவுதல்.

பிரதான செயற்பாடுகள்		
ரூ.	30.0 பி.	பாடசாலை ஊட்டச்சத்து உணவுத் திட்டம்
ரூ.	10.0 பி.	பாடப்புத்தகங்கள்
ரூ.	38.2 பி.	பாடசாலைகள் சீருடைகள்
ரூ.	2.5 பி.	கஷ்ட மற்றும் அதிகஷ்டமான பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு பாதணிகள்
ரூ.	2.3 பி.	சுரக்ஷா காப்புறுதித் திட்டம்
ரூ.	1.9 பி.	தரம் 5 புலமைப் பரிசில்கள்
ரூ.	2.3 பி.	மாணவிகளுக்கான துப்புரவுத் துவாய்கள்
ரூ.	17.3 பி.	பருவச் சீட்டு மானியம் மற்றும் சிசுசரிய
ரூ.	0.16 பி.	விளையாட்டுப் பாடசாலைகளுக்கு போசாக்கு உணவு வழங்குதல்



முன்- பள்ளி மற்றும் முன்பிள்ளைப் பருவக் கல்வி - ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு வலுவான தொடக்கத்தை அளித்தல், சிறந்த முறையில் தயாராகி குழந்தைகள் பாடசாலைகளில் சேர்தல்

ரூ. 5.6 பில்லியன்



பிரதான செயற்பாடுகள்		
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான குரு அபிமானி கொடுப்பனவு	ரூ.	1.19 பி.
முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவுத் திட்டம்	ரூ.	4.4 பி.

ரூ. 148.4
பில்லியன்

பல்கலைக்கழகக் கல்வி - உயர்கல்விக்கான மேலதிக வாய்ப்புகள் மற்றும் மேம்பட்ட பல்கலைக்கழக வசதிகள்



பிரதான செயற்பாடுகள்

ரூ. 76.6 பி.	19 பல்கலைக்கழகங்களுக்கான ஆள்சார் வேதனங்கள்
ரூ. 6.3 பி.	பேராதெனிய பல் மருத்துவ பீடம், வவுனியா, மொரட்டுவ, அம்பாறை ஹார்டி மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களில் உள்ள விடுதிகள் மற்றும் உணவகங்கள் உள்ளிட்ட மாணவர் வசதிகள்.
ரூ. 2.0 பி.	ஊவா வெல்லஸ்ஸ, ருஹுணு, பேராதெனியா, ராஜரட்ட, வயம்ப ஆகிய பல்கலைக்கழகங்களில் மாணவர் ஆய்வுகூடங்கள் மற்றும் பயிற்சி வசதி மேம்பாடு.
ரூ. 13.8 பி.	கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு அரசின் ஆதரவு
ரூ. 1.6 பி.	சப்ரகமுவ பல்கலைக்கழக மருத்துவ பீடம்
ரூ. 12.2 பி.	அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் வசதிகளை அபிவிருத்தி செய்தல்
ரூ. 3.5 பி.	அரச பல்கலைக்கழக நுழைவு பெறமுடியாத மாணவர்களுக்கான கடன் வசதி
ரூ. 7.2 பி.	மகாபொல மற்றும் கல்வி உதவித்தொகை
ரூ. 1.6 பி.	மொரட்டுவ மற்றும் ஊவா வெல்லஸ்ஸ ஆகியவற்றில் மருத்துவ பீடம் தாபித்தல்

ரூ. 25.7
பில்லியன்

தொழிற்கல்வி - மேம்பட்ட திறன்கள் சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முயற்சியாண்மை வாய்ப்புகள்



பிரதான செயற்பாடுகள்

தொழிற்பயிற்சி நிறுவனங்களில் வசதிகளை மேம்படுத்துதல்	ரூ. 3.5 பி.
50 தொழிற்பயிற்சி நிறுவனங்களை விருத்தி செய்தல்	ரூ. 2.8 பி.
நிபுணதா சிசுதிரிய புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம்	ரூ. 1.7 பி.
மாணவர் விடுதிகள், பயிற்சிப் பட்டறைகள், சிற்றுண்டிச்சாலை மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகம் ஆகியவை நிர்மாணம்	ரூ. 0.8 பி.
மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பயிற்சி மையம்	ரூ. 0.2 பி.
பயிற்சிகளை நடத்துதல் , பாடத்திட்ட அபிவிருத்தி, நவீன பணிச் சந்தைக்கு ஏற்ற திறன் முன்கணிப்பு முறைமை	ரூ. 1.7 பி.
தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான பருவச் சீட்டுகள்	ரூ. 0.16 பி.

ரூ. 5.4
பில்லியன்

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் - அறிவை மேம்படுத்த அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை வலுப்படுத்துங்கள்



பிரதான செயற்பாடுகள்

ரூ. 1.27 பி.	கிராமப்புறங்களுக்கு தொழில்நுட்பம் வழங்குவதற்கான " விதாதா" நிகழ்ச்சித் திட்டம்
ரூ. 0.16 பி.	கோள் மண்டல கூட செயல்பாடு

அனைவருக்கும் பாதுகாப்பான, நம்பகமான மற்றும் வினைத்திறனான போக்குவரத்து

இலங்கையை இணைத்தல்- மக்கள், வியாபாரங்கள் மற்றும் சமூகங்களுக்கான சிறந்த போக்குவரத்து

மூலதன செலவினம்
ரூ. 399.5 பில்லியன்

மீண்டெலும் செலவினம்
ரூ. 58.65 பில்லியன்

ரூ. 458 பில்லியன்

	மொத்தம்	மூலதனம்	ரூ. பில்லியன் மீண்டெழும்
வீதிகள்	294.8	285.5	9.3
பாலங்கள்	19.2	19.2	-
புகையிரதம்	95.6	56.8	38.8
போக்குவரத்து	45.15	35.0	10.05
துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள்	3.7	3.0	0.7



2027 ஆம் ஆண்டிற்கான பிரதான செயற்பாடுகள்

ரூ. 294.8 பில்லியன்

வீதிகள்

- அதிவேக வீதி வலையமைப்பை விரிவாக்குதல்
- சிறந்த வீதிகளை உருவாக்குதல்
- கிராமப்புற இணைப்பை மேம்படுத்துதல்
- போக்குவரத்து பாதுகாப்பை வலுப்படுத்துதல்

அதிவேக பாதை வலையமைப்பை விரிவுபடுத்துதல் – நாடு முழுவதும் மக்கள் மற்றும் பொருட்களின் விரைவான போக்குவரத்திற்காக

ரூ. 100.3 பில்லியன்

பிரதான செயற்பாடுகள்

முன்னுரிமை அதிவேக கருத்திட்டங்கள், கடவதவிலிருந்து மிரிகம வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலைப் பகுதிகள் மற்றும் பொத்துஹேரவிலிருந்து கலேகெதர வரையிலான பிரிவுகள் ஆகியவற்றின் தொடர்ச்சி	ரூ. 79.0 பி.
துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை கட்டுமானப் பணிகளின் தொடர்ச்சி	ரூ. 10.7 பி.
குருநாகல் - தம்புள்ளை அதிவேக நெடுஞ்சாலைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள்	ரூ. 3.2 பி.
கஹதுடுவ முதல் இங்கிரிய வரையிலான அதிவேக நெடுஞ்சாலைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள்	ரூ. 2.0 பி.

சிறந்த வீதிகளை அமைத்தல் – பாதுகாப்பான மற்றும் வேகமான பயணங்களுக்கு

ரூ. 89 பில்லியன்

பிரதான செயற்பாடுகள்

ரூ. 31.2 பி.	சுமார் 12,600 கி.மீ தேசிய வீதிகள் புனரமைப்பு
ரூ. 22.0 பி.	தேசிய பாதை வலையமைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதைப் பிரிவுகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்
ரூ. 10.0 பி.	இரத்தினபுரி முதல் நம்பபான வரை மற்றும் கடுகஸ்தோட்டை முதல் கலகெதர வரையிலான வீதிகள் உட்பட முன்னுரிமை பாதைகளின் அபிவிருத்தி .
ரூ. 11.0 பி.	தேசிய பாதை வலையமைப்பு நெடுகிலும் உள்ள பாலங்கள் மற்றும் அது தொடர்பான உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்
ரூ. 3.5 பி.	பாதை மேம்பாட்டிற்காக காணிகளை கொள்வனவு செய்தல்
ரூ. 0.4 பி.	பேஸ்லைன் வீதியில் உள்ள 11 சந்திப்புகளை மேம்படுத்துதல்
ரூ. 1.9 பி.	கண்டி பன்முக நுழைவாயிலில் மற்றும் அலவ்வ மற்றும் முத்தெட்டுகல ரயில் பாதைக்கு மேல் மேம்பாலங்கள்,
ரூ. 1.5 பி.	கிரண்ட, பொண்டுகளச்சேனை, கொக்கிளாய் குளத்தின் குறுக்கே, புண்ணியடி படகு வீதியில் பாலங்கள்

போக்குவரத்துப் பாதுகாப்பை வலுப்படுத்துதல் – குறைவான விபத்துகள் மற்றும் பாதுகாப்பான பயணங்கள்

ரூ. 4.4 பில்லியன்

பிரதான செயற்பாடுகள்

வீதி வலையமைப்பில் உள்ள அபாயகரமான இடங்களுக்கான தடுப்பு வேலிகள் உள்ளிட்ட வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்கட்டமைப்புகளின் கட்டுமானம்.	ரூ. 2.1 பி.
டிஜிட்டல் வாகன ஓட்டுநர் குறைப்புப் புள்ளி முறைமை மற்றும் வீதிப் பாதுகாப்பு அமுலாக்கத் தளம் அறிமுகம்., பாதுகாப்பான வீதிப் பயனர் நடத்தையை ஊக்குவித்தல் – மோ. வா.போ. திணைக்களத்தின் குறைப்புப் புள்ளி முறை.	ரூ. 1.5 பி.

கிராமப்புற இணைப்பை மேம்படுத்துதல் – வேலைகள், சந்தைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை எளிதாக அணுகுவதற்காக

ரூ. 80.5 பில்லியன்

பிரதான செயற்பாடுகள்

ரூ. 31.0 பி.	நாடு முழுவதும் சுமார் 2000 கி.மீ. கிராமப்புற பாதைகளை மேம்படுத்துதல்
ரூ. 22.0 பி.	நாடு முழுவதும் கிராமப்புற பாதை அபிவிருத்தி
ரூ. 7.5 பி.	கிராமப்புற பாலங்கள் அபிவிருத்தி
ரூ. 20.0 பி.	மாகாண பாதைகளின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு



ரூ. 45.15
பில்லியன்

பொதுப் போக்குவரத்தை மேம்படுத்துதல் – மேலும் நம்பகமான, எளிதில் அணுகக்கூடிய மற்றும் வசதியான பொதுப் போக்குவரத்து



பிரதான செயற்பாடுகள்

ரூ.	14.0 பி.	கண்டி பல்முனைப் போக்குவரத்து மைய அபிவிருத்தி
ரூ..	6.0 பி.	இலங்கை போக்குவரத்து சபைக்கு (SLTB) நெடுந்தூர சேவைகளுக்காக 600 சொகுசுப் பேருந்துகள் கொள்வனவு
ரூ.	2.2 பி.	பேருந்து தொகுதி பராமரிப்பிற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு ஆதரவு வழங்கல்
ரூ.	0.4 பி.	கொத்தணி அடிப்படையிலான பேருந்து இயக்க மாதிரி மற்றும் இலங்கை போக்குவரத்து சபை டிஜிட்டல் உருமாற்றம்
ரூ.	4.0 பி.	இலாபமற்ற வழித்தடங்களில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளை இயக்குதல்
ரூ.	4.5 பி.	நகர்ப்புறங்களில் மின்சாரப் பேருந்துகளை அறிமுகப்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகளுக்காக
ரூ.	1.5 பி.	(சிசு சரிய தவிர்ந்த) நிசி சரிய மற்றும் இரவு நேர பேருந்து சேவைகளை தொடர்வதற்கான அரச பங்களிப்பு

ரூ. 95.6
பில்லியன்

நம்பகமான ரயில் போக்குவரத்தை வலுப்படுத்துதல் – நம்பகரமான, வசதியான மற்றும் நீடித்த போக்குவரத்திற்காக



பிரதான செயற்பாடுகள்

புகையிரதத் தொகுதிகளின் புனரமைப்பு	ரூ.	9.0 பி.
புகையிரதத் தண்டவாளங்கள் மற்றும் சமிக்ஞை புனரமைப்பு	ரூ.	8.6 பி.
புகையிரதத் தொகுப்பில் 5 புதிய புகையிரதங்களை இணைத்தல்	ரூ.	5.0 பி.
நிலையங்கள் மற்றும் பயணிகள் வசதிகளை மேம்படுத்துதல்	ரூ.	2.0 பி.
பொல்கஹவெல முதல் குருநாகல வரையிலான ரயில் பாதையை இரட்டைப் பாதையாக்குதல்	ரூ.	4.0 பி.
களனி ஆற்றின் மேலான பாலம் உட்பட 11 ரயில்வே பாலங்களை மாற்றுதல்	ரூ.	3.3 பி.
பயணிகள் பெட்டிகளின்புனரமைப்பு மற்றும் புதிய பயணிகள் பெட்டிகள் கொள்வனவு	ரூ.	1.1 பி.

ரூ. 3.7
பில்லியன்

துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து – உலகளாவிய சந்தையில் மேம்பட்ட போட்டித்திறனுக்கான மேம்படுத்தப்பட்ட கட்டுமான சேவைகள்



பிரதான செயற்பாடுகள்

ரூ.	1.45 பி.	கொழும்பு துறைமுக அபிவிருத்தி
ரூ.	0.5 பி.	காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி



கண்ணியமான வாழ்க்கைக்கான ஆதரவு

ஒவ்வொரு சமூகத்திற்கும் சிறந்த வீடுகள், அத்தியாவசிய சேவைகள் மற்றும் வாய்ப்புகள்.

ரூ. 208.6 பில்லியன்

மூலதன செலவினம்
ரூ. 195.7 பில்லியன்

மீண்டெலும் செலவினம்
ரூ. 12.9 பில்லியன்

	மொத்தம்	மூலதனம்	ரூ. பில்லியன் மீண்டெழும்
குடிநீர் வழங்கல்	77.9	77.2	0.71
வீடமைப்பு	64.1	61.7	2.4
கிராமப்புற அபிவிருத்தி	42.0	42.0	0.09
இளைஞர் மற்றும் விளையாட்டு	17.0	8.5	8.5
நகர்ப்புற அபிவிருத்தியில் உள்கட்டமைப்பு அபிவிருத்தி	7.4	6.2	1.2



2027 ஆம் ஆண்டிற்கான பிரதான செயற்பாடுகள்

ரூ. 77.9 பில்லியன்

குடிநீர் வழங்கல் - பாதுகாப்பான குடிநீரை நம்பகரமான முறையில் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்தல்



பிரதான செயற்பாடுகள்

ரூ. 10.0 பி.	தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் கொள்ளளவு மற்றும் விநியோகத்தை மேம்படுத்துதல்
ரூ. 4.0 பி.	யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குழாய் மூலம் நீர் வழங்குதல்
ரூ. 4.5 பி.	எப்பாவல , கிரிபாவ , ராஜாங்கனை மற்றும் நொச்சியாகம பகுதிகளில் நீர் விநியோகத்தை விரிவுபடுத்துதல்
ரூ. 6.6 பி.	கெபிதிகொல்லேவ , ஹொரவப்பொத்தானை , பதவிய, கஹட்டகஸ்திகிலிய பிரதேசங்களின் 119 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்குதல்.
ரூ. 5.6 பி.	கெஸ்பேவ , பாதுக்க , மொரட்டுவ , ஹோமாகம , இரத்மலானை , தெஹிவளை, பண்டாரகம , புலத்சிங்கள , இங்கிரிய , பாணந்துறை, களுத்துறை, ஹொரணை, மதுரவல மற்றும் மிலானிய ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 654 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு குழாய் மூலம் நீர் விநியோக சேவையை மேம்படுத்துதல் .
ரூ. 3.0 பி.	கண்டி மாவட்டத்தில் உள்ள பாததும்பரா , அக்குரன , ஹரிஸ்பத்துவ , பூஜாபிட்டிய , கண்டி ஃபோர் கிராவட்ஸ் மற்றும் தும்பானே ஆகிய பகுதிகளில் குழாய் மூலம் நீர் விநியோகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், தற்போதுள்ள குடிநீர் வழங்கல் திட்டங்களை விரிவாக்குதல்.
ரூ. 3.0 பி.	சுமார் 3,700 சமூக நீர் வழங்கல் திட்டங்களைப் பராமரித்தல்
ரூ. 3.0 பி.	காலி நகரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குழாய் மூலம் நீர் விநியோகத்தை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.



ரூ. 42 பில்லியன்

கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துதல் – மேம்பட்ட கிராமப்புற உட் கட்டமைப்பு மற்றும் சமூகங்களுக்கான கூடுதல் வாய்ப்புகள்

பிரதான செயற்பாடுகள்

பிரஜாசக்தி தேசிய நிகழ்ச்சித் திட்டம்	ரூ. 25.0 பி.
வடக்கு, கிழக்கு, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கிராமப்புற பதைகள் , நடுத்தர மற்றும் சிறு அளவிலான நீர்ப்பாசன மற்றும் கிராமப்புற நீர் வழங்கல் வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்	ரூ. 7.7 பி.
அவசியமான உள்ளூர் தேவைகள் மற்றும் அடிமட்ட அளவில் பொதுச் சேவைகளை மேம்படுத்துதல்	ரூ. 2.2 பி.
பிராந்திய சமநிலை மேம்பாடு (பிரமாண அடிப்படை மானியங்கள்)	ரூ. 7.0 பி.

ரூ. 7.4 பில்லியன்

சிறந்த நகரங்களையும் மாநகரங்களையும் உருவாக்குதல் – நகரங்கள் மற்றும் மாநகரங்களில் மேம்பட்ட பொது இடங்கள், சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு

பிரதான செயற்பாடுகள்

ரூ. 1.0 பி.	இரத்தினபுரி நகரில் அரச ஊழியர்களுக்கான அரச விடுதிகள் கட்டுமானம்
ரூ. 1.3 பி.	மடு புனிதப் பகுதி மற்றும் தெயந்தராவில் வசதிகள் மேம்பாட்டுப் பணிகள்
ரூ. 0.5 பி.	100 நகரங்களில் நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நகர மேம்பாடு
ரூ. 0.47 பி.	அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட மூலோபாய நகரங்களின் அபிவிருத்தி
ரூ. 0.7 பி.	யாழ்ப்பாண நகர மண்டபத்தின் மீள்கட்டுமானம்
ரூ. 0.15 பி.	ரத்கம நகர அபிவிருத்தி

சிறந்த மற்றும் நியாயமான விலையில் வீடுகளை வழங்குதல் – பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பாதுகாப்பான மற்றும் நியாயமான விலையில் வீடுகள்

ரூ. 64.1 பில்லியன்

பிரதான செயற்பாடுகள்

1,600 வீடுகளை நிறைவு செய்தல், சுமார் 4,000 வீடுகளின் கட்டுமானப் பணிகளைத் தொடர்தல் மற்றும் கொலம்பகே மாவத்தை, டொரிங்டன், மீதொட்டமுல்ல, வில்கொட, பெர்குசன் வீதி, ஸ்டேடியம்கம மற்றும் ஒபேயசேகரபுர, கிம்புலாஎல ஆகிய இடங்களில் உள்ள முறைசாரா குடியிருப்புப் பகுதிகளுக்கு சுமார் 2,000 புதிய வீடுகளின் கட்டுமானப் பணிகளைத் தொடங்குதல்.	**ரூ. 20.3 பி.**
மொரட்டுவ, கொட்டாவ, தெமட்டகொட, மஹரகம மற்றும் பேலியகொட ஆகிய இடங்களில் மக்களை மீள்குடியேற்றுவதற்காக 1996, வீட்டு அலகுகளின் கட்டுமானப் பணிகள் தொடர்தல்	**ரூ. 6.5 பி.**
தமெங்கம தேனக் லஸ்ஸன ஜிவதக் வீட்டுத் திட்டத்தின் மூலம் 10,000 குறைந்த வருமானம் பெறும் மற்றும் ஏழைக் குடும்பங்களுக்கு ஆதரவு	**ரூ. 13.0 பி.**
தோட்டத் தொழிலாளர்களுக்காக சுமார் 2,800 வீடுகள் நிர்மாணித்தல்	**ரூ. 2.8 பி.**
ஆரம்யா பகுதியில் பகுதியில்மீள்குடியேற்ற வீட்டுவசதிக் கருத் திட்டம்	**ரூ. 2.1 பி.**
தென் மாகாணத்தில் 775 வீடுகளுக்கான எஞ்சிய பணிகளை நிறைவு செய்தல்	**ரூ. 0.3 பி.**
மன்னாரில் குறைந்த வருமானம் கொண்ட மக்களுக்கான 96 வீடுகளின் எஞ்சிய பணிகளை நிறைவு செய்தல்	**ரூ. 0.1 பி.**
நிறுவனங்களில் தங்கவைக்கப்பட்ட நபர்களை மீண்டும் சமூகத்துடன் இணைப்பதற்கும், குழந்தை பாதுகாப்பிற்கும் வீட்டுவசதி வழங்குதல்	**ரூ. 2.0 பி.**
மோதலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முழுமையான வீடுகள்	**ரூ. 6.0 பி.**
மண்சரிவு அபாயங்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்தல்	**ரூ. 3.2 பி.**
வீட்டுவசதித் திட்டங்களின் பொது வசதிகள் , கட்டிடங்கள், கழிவுநீர் அமைப்புகள், மின்தூக்கிகள் மற்றும் பிற வசதிகளைப் புனரமைத்தல்	**ரூ. 4.2 பி.**

கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துதல் – மேம்பட்ட கிராமப்புற உட் கட்டமைப்பு மற்றும் சமூகங்களுக்கான கூடுதல் வாய்ப்புகள்

ரூ. 17.0 பில்லியன்

பிரதான செயற்பாடுகள்

ரூ. 2.5 பி.	உபகரணங்களை வழங்குதல், விளையாட்டு உட் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் பயிற்சிகளை அளித்தல் ஆகியவற்றின் மூலம் ஒரு விளையாட்டுக் கலாச்சாரத்தை நிறுவுதல்
ரூ. 1.8 பி.	சுகததாஸ விளையாட்டு வளாகத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு
ரூ. 0.35 பி.	தேசிய குழுமங்களில் உள்ள உறுப்பினர்களுக்கான ஊட்டச்சத்து
ரூ. 0.3 பி.	உயர் செயற்திறன் மிக்க விளையாட்டு வசதி
ரூ. 0.34 பி.	மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் கட்டுமானம்
ரூ. 0.7 பி.	தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல்
ரூ. 0.35 பி.	சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான வசதி



வலுவான விவசாயத் துறையை வளர்த்தல்

உணவு உற்பத்தியை வலுப்படுத்துதல், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஒரு மீள்திறன் கொண்ட விவசாய பொருளாதாரத்தை உருவாக்குதல்

மூலதன செலவினம்
ரூ. 154.2 பில்லியன்

ரூ. 273 பில்லியன்

மீண்டெலும் செலவினம்
ரூ. 118.8 பில்லியன்

	மொத்தம்	மூலதனம்	ரூ. பில்லியன் மீண்டெழும்
விவசாயம்	123.0	45.2	77.7
நீர்ப்பாசனம்	93.0	80.4	12.6
கால்நடை	9.4	8.1	1.2
தோட்டத்தொழில்	22.5	9.3	13.1
மீன்பிடித்துறை	11.7	7.4	4.3
காணி	13.4	3.8	9.6



2027 ஆம் ஆண்டிற்கான பிரதான செயற்பாடுகள்

ரூ. 123 பில்லியன்

விவசாயம்

விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல்

விவசாயிகள் இடர்பாடுகளையும் மாற்றங்களையும் எதிர்கொள்ள அவர்களுக்கு ஆதரவளியுங்கள்

விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல் - அதிக உற்பத்தித்திறன், வலுவான உணவு உற்பத்தி மற்றும் விவசாயிகளுக்கு சிறந்த வாய்ப்புகள்

பிரதான செயற்பாடுகள்

ரூ. 8.7 பி.	சிறு பற்றுநில விவசாய உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித்திறன், சந்தை அணுகல் மற்றும் பெறுமானம் சேர்த்தலை அதிகரித்தல், மேலும் நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் கால்வாய்களைப் புனரமைத்தல்.
ரூ. 4.5 பி.	காலநிலை பாதிப்புக்குள்ளாகக்கூடிய ஆறு மாவட்டங்களான புத்தளம், குருநாகல, மாத்தளை, அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய இடங்களில் உள்ள 40,000 கிராமப்புற சிறு விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், காலநிலை பாதிப்பைத் தாங்கு திறனையும் மேம்படுத்துதல்.
ரூ. 2.1 பி.	விதை உற்பத்தி, கொள்வனவு மற்றும் விதைகளின் தரத்தை உறுதி செய்தல்
ரூ. 13.5 பி.	மாகாண விவசாய அபிவிருத்தி



இடர் மற்றும் மாற்றத்தின் ஊடாக விவசாயிகளுக்கு ஆதரவளித்தல் - மேலும் மீள்திறன் கொண்ட விவசாயிகள் மற்றும் விவசாய வாழ்வாதாரங்களின் மேம்பட்ட நிலைத்தன்மை.

பிரதான செயற்பாடுகள்

உர மானிய நிகழ்ச்சித் திட்டம்	ரூ. 44.0 பி.
விவசாயிகளுக்கான ஓய்வூதியம்	ரூ. 5.2 பி.
நெல், சோளம், உருளைக்கிழங்கு, மிளகாய், பெரிய வெங்காயம் மற்றும் சோயாபீன்ஸ் ஆகியவற்றுக்கான கட்டாயப் பயிர்க் காப்புறுதித் திட்டம்	ரூ. 1.5 பி.
ஏற்றுமதிப் பயிர் அபிவிருத்திக்கான ஆதரவு	ரூ. 1.1 பி.

ரூ. 11.7 பில்லியன்

மீன்வளம் மற்றும் கடலோர வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் – மீனவ சமூகங்களுக்கான சிறந்த வசதிகள் மற்றும் வலுவான மீன்பிடி வாழ்வாதாரங்கள்



பிரதான செயற்பாடுகள்

ரூ. 1.5 பி.	கந்தர மீன்பிடித் துறைமுகம் கட்டுமானம்
ரூ. 1.4 பி.	மயிலிட்டி, வெல்லமங்கர,பாணந்துறை, பேருவளை , ஹிக்கடுவ , அம்பலாங்கொட , தொடந்துவ , காலி, மிரிஸ்ஸ, பூரணவெல்ல , குடாவெல்ல, தங்கல்ல மற்றும் நில்வெல்ல ஆகிவை உள்ளிட்ட 16 மீன்பிடித் துறைமுகங்கள் அபிவிருத்தி.
ரூ. 0.6 பி.	கடல் வெள்ளரி வளர்ப்பு தொடர்பான புத்தாக்கத் தொழிநுட்பம் மற்றும் வணிகமயமாக்கல்
ரூ. 0.4 பி.	மீன்பிடிப் படகுகள், மீன் சேமிப்புத் தொட்டிகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட மீன்பிடி வலைகள், கடல்சார் பிளாஸ்டிக் ஆகியவற்றுக்கான மீள்சுழற்சி முறையை அறிமுகப்படுத்துதல்.
ரூ. 0.7 பி.	தேசிய கடற்றொழில் தர உறுதிப்பாடு, பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த தேசிய ஆய்வக வலையமைப்புக் கருத்திட்டம்
ரூ. 0.3 பி.	புத்தளம், மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் விஞ்ஞான ரீதியான கடல் வள முகாமைத்துவம் மற்றும் சூழல் முறைமை மீட்சி

ரூ. 93
பில்லியன்

விவசாயத்திற்காக நீரைப் பாதுகாத்தல் – விவசாயத்திற்காக மேலும் நம்பகரமான நீர் மற்றும் சிறந்த வரட்சி தாங்குதிறன்

பிரதான செயற்பாடுகள்

ரூ.	6.5 பி.	நாடு முழுவதும் உள்ள முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் புனரமைத்தல்
ரூ.	3.8 பி.	மகாவலி நீர்ப்பாசன முறையைப் பராமரித்தல்
ரூ.	2.0 பி.	முல்லைத் தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்குவதற்காக கியுலோயா நீர்த்தேக்கம் நிர்மாணித்தல்
ரூ.	2.0 பி.	நாடு முழுவதும் சிறு நீர்ப்பாசனம், கால்வாய் அமைப்புகள், கிராமப்புற குளங்கள் மேம்பாடு
ரூ.	1.5 பி.	மாதுரு-ஓயா வலது கரை மேம்பாடு
ரூ.	10.9 பி.	254 மதகுகள், சிறு கால்வாய்கள், அணைக்கட்டுகள் மற்றும் வயல்வெளிக் கால்வாய்கள், 134 குளங்கள், 847 கால்வாய்ப் பணிகள், 33 அணைகள் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளின் தொடர்ச்சி
ரூ.	5.5 பி.	நாடு முழுவதும் 42 குளங்கள் மற்றும் 82 கால்வாய்களின் புனரமைப்பு
ரூ.	2.0 பி.	நாடு முழுவதும் 125 கிராமிய நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு
ரூ.	2.5 பி.	"வரி மஹிமா" திட்டம்: பல மாவட்டங்களில் உள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், அணைக்கட்டுகள், நீர்வீழ்ச்சிகள், கால்வாய்கள் மற்றும் கிராமப்புற நீர் அமைப்புகளைச் சீரமைத்தல்.
ரூ.	2.6 பி.	நாடு முழுவதும் 241 நீர்த்தேக்கங்கள் மற்றும் 113 அணைக்கட்டுகளின் புனரமைப்பு.
ரூ.	7.5 பி.	கீழ் மல்வத்து ஓயா அமைப்பை மேம்படுத்துதல் (அணை கட்டுமானம், வான் கதவு கட்டுமானம், வீடுகள் உள்ளிட்ட மக்கள் மீள்குடியேற்ற வசதிகள், மின்சார வேலிகள், காணிகொள்வனவு)
ரூ.	19.5 பி.	ஹொரவபொத்தானை , கஹட்டகஸ்திகிலிய , ரம்பேவ, மத்திய நுவரகம் பிரதேசம் மிஹிந்தலை , பலுகஸ்வெவ , கெக்கிராவ , கலென்பிந்துனுவெவ மற்றும் அனுராதபுரம் மாவட்டத்தில் திரப்பனே மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் எலஹெர ஆகிய பகுதிகளை இணைக்கும் மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து மகாகனதரவா வரை வட மத்திய மாகாண கால்வாய்ப் பாதையை நிறைவுசெய்தல்
ரூ.	0.7 பி.	அலிகொட்ட ஆரா மற்றும் குடா ஓயா சேமிப்பு நீர்த்தேக்கங்களின் (உமாஓயா) கட்டுமானம்
ரூ.	1.0 பி.	எல்லவெவ நீர்த்தேக்கத்தின் பிரதான அணை ,மேலதிக நீர்வெளி யேற்றும் பாதை மற்றும் கீழ்மட்ட வெளியேற்று வழி , ராஜங்கனை நீரேற்றுத் திட்டத்தின் நவீனமயமாக்கல் , சியம்பலங்கமுவ ஓயா முதல் மஹாகல்கமுவா குளம் வரை பாசனக் கால்வாயை நிறைவு செய்தல்

ரூ. 9.4
பில்லியன்

கால்நடை மற்றும் பால் உற்பத்தியை வலுப்படுத்துதல் – உயர்ந்த கால்நடை உற்பத்தித்திறன், வலுவான விவசாயிகளின் வருமானம் மற்றும் அதிகரித்த உள்நாட்டு உணவு உற்பத்தி

பிரதான செயற்பாடுகள்



படல்கம பால் பதப்படுத்தும் ஆலை	ரூ.	3.0 பி.
பாற்பொருள் உற்பத்தித்திறன் அபிவிருத்தி	ரூ.	1.0 பி.
ஆடு வளர்ப்புக்குரிய வாழ்வாதாரத்தை ஊக்குவித்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர பண்ணைகளுக்குத் தேவையான உள்ளீடுகளை மானிய விலையில் வழங்குதல்	ரூ.	0.2 பி.
கால்நடை இனப்பெருக்கப் பண்ணைகள் அமைத்தல்	ரூ.	1.0 பி.
2,000 செம்மறி ஆடுகள் இறக்குமதி	ரூ.	1.0 பி.

ரூ. 22.5
பில்லியன்

தோட்ட சமூகங்களையும் உற்பத்தியையும் வலுப்படுத்துதல் – உயர் தோட்ட உற்பத்தித்திறன் மற்றும் சிறு பற்றுநில விவசாயிகளுக்கு சிறந்த வாழ்வாதாரம்

பிரதான செயற்பாடுகள்

ரூ.	3.8 பி.	தோட்டத் தொழிலாளர்களுக்கான ஊக்கத்தொகை
ரூ.	3.0 பி.	நுவரெலியா , பதுளை, கண்டி, இரத்தினபுரி,கேகாலை, மாத்தளை, குருநாகல, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, மொனராகலை மாவட்டங்களில் உள்ள தோட்டங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், நீர் வழங்குதல், "பிரஜாசக்தி மையங்களை" மேம்படுத்துதல், பாதைகள் அபிவிருத்தி செய்தல்.
ரூ.	0.65 பி.	வடக்கு தென்னை முக்கோண வலயத்தை நிறுவுதல்

இடர் மற்றும் மாற்றத்தின் ஊடாக விவசாயிகளுக்கு ஆதரவளித்தல்

- ரூபா 1.15 பில்லியன் – புதிய பயிர்ச்செய்கைகளுக்கும், கைவிடப்பட்ட முதிர்ந்த இரப்பர் தோட்டங்களை மீள் பயிர்ச்செய்கை செய்வதற்கும் வழங்கப்படும் மானியம்.
- ரூபா 1.5 பில்லியன் – சிறு தேயிலைத் தோட்டங்களின் மீள் பயிர்ச்செய்கை
- ரூபா 3.4 பில்லியன் – தென்னை பயிர்ச்செய்கைக்கான மானியம்
- ரூபா 0.4 பில்லியன் – இலங்கை கறுவா கைத்தொழிலுக்குப் புத்துயிர் அளித்தலுக்காக விவசாயிகளுக்கு உதவுதல்

ரூ. 13.4
பில்லியன்

காணியை சிறந்த முறையில் பயன்படுத்துதல் – சிறந்த காணி முகாமைத்துவம் மற்றும் காணி உரிமையில் அதிகப் பாதுகாப்பு



பிரதான செயற்பாடுகள்

அரச நோக்கத்திற்காக காணிக் கொள்வனவு	ரூ.	1.4 பி.
பிம்சவிய நிகழ்ச்சித் திட்டம்	ரூ.	0.8 பி.
காணி அளவை செயற்பாடுகள்	ரூ.	0.5 பி.



என்றும் பசுமையான வாழ்வை நோக்கி

மூலதன செலவினம்
ரூ. 45.5 பில்லியன்

மீண்டெலும் செலவினம்
ரூ. 16.5 பில்லியன்

ரூ. 62.2 பில்லியன்

	மொத்தம்	மூலதனம்	ரூ. பில்லியன் மீண்டெழும்
கரையோரப் பாதுகாப்பு	5.8	5.3	0.5
அனர்த்த முகாமைத்துவம்	15.2	11.57	3.5
சுற்றுச்சூழல் முகாமைத்துவம்	10.5	4.0	6.5
கழிவுநீர் முகாமைத்துவம்	12.7	12.7	
வெள்ள நீர் முகாமைத்துவம்	7.7	7.7	
திரவக் கழிவு முகாமைத்துவம்	3.7	3.7	
வனஜீவராசிகள் பாதுகாப்பு	6.5	0.43	6.1



2027 ஆம் ஆண்டுக்கான பிரதான செயற்பாடுகள்


ரூ. 15.2 பில்லியன்

அனர்த்த அபாயங்களைக் குறைத்தல் – சிறப்பாகத் தயார்படுத்தப்படும் சமூகங்கள் மற்றும் விரைவான நடவடிக்கை -



பிரதான செயற்பாடுகள்

